**1800 000 277**

திங்கள் முதல் வெள்ளி வரை,
9am-5pm

# நவீன அடிமைத்தனம்

## ஆதரவு கிடைக்கும்

உங்கள் வயது*, பாலினம், பாலியல், இனம், கலாச்சாரம், மதம் அல்லது விசா நிலை எதுவாக இருந்தாலும் - உங்களுக்கென்று உரிமைகள் உள்ளன - அத்துடன் உதவியும் பெறலாம்.

### நாங்கள் எவ்வாறு உதவ முடியும்

- நாங்கள் இலவச மற்றும் இரகசிய ஆதரவை வழங்குகிறோம்
- உங்கள் உரிமைகள் மற்றும் வாய்ப்புகள் புரிந்துகொள்ள நாங்கள் உங்களுக்கு உதவ முடியும்
- நாங்கள் உங்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்க முடியும்
- உங்களின் உடனடிப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுத் தேவைகளுக்கு நாங்கள் உங்களுக்கு உதவ முடியும்

நவீன அடிமைத்தனம் எனப்படும் சுரண்டலை அனுபவித்துக் கொண்டிருக்கும் அல்லது ஏற்கனவே அனுபவித்திருக்கும் நபர்கள் ஆதரவைப் பெறுவதற்கான ஒரு வழிதான் கூடுதல் பரிந்துரை வழிமுறையாகும்.

### மேலும் தகவல்களுக்கு

எங்கள் இணையதளத்துக்குச் செல்லவும்: இங்கே அலகீடு (ஸ்கேன்) செய்யவும்

www.salvationarmy.org.au/additional-referral-pathway

ANTI-SLAVERY AUSTRALIA · Australian Muslim Women's Centre for Human Rights · project respect · Scarlet Alliance Australian Sex Workers Association · THE SALVATION ARMY

**1800 000 277**

திங்கள் முதல் வெள்ளி வரை,
9am-5pm

# அடையாளங்கள்

## யாரோ ஒருவர் நவீன அடிமைத்தனத்தை அனுபவித்துக் கொண்டிருக்கக்கூடும்:

- அச்சுறுத்தல் அல்லது வற்புறுத்தலின் பேரிலோ அல்லது கடுமையான சூழ்நிலைகளின் காரணத்தினாலோ வேலை செய்ய வேண்டிய கட்டாயம்
- வேலை செய்வதற்கு அல்லது சேவைகளை வழங்குவதற்கு ஏமாற்றப்படுதல் அல்லது சிக்க வைக்கப்படுதல்
- நிர்ப்பந்தித்து அல்லது ஏமாற்றி ஆள் சேர்த்து கொண்டு செல்லப்படுதல்
- வாழ்க்கையின் மற்ற பகுதிகளில் சுயமுடிவு இல்லாத நிலைமை உதாரணத்திற்கு எங்கே, எப்போது உணவருந்துவது, தூங்குவது, ஓய்வெடுப்பது அல்லது வெளியேறுவதற்கான சுதந்திரம்
- வேலையின் மீது சுயமுடிவு இல்லாத நிலைமை, வேலையை எப்போது நிறுத்தமுடியும் மற்றும்/அல்லது எதிர்பார்த்த வேலைத்தன்மை இல்லாமை
- நியாயமற்ற கடனை அல்லது ஒருபோதும் முடிவடையாத கடனை அடைப்பதற்காக உழைக்க வேண்டிய கட்டாயம்
- குறைந்த ஊதியத்தில் அல்லது ஊதியமே இல்லாமல் வேலை செய்தல்
- உங்கள் விருப்பத்திற்கு மாறாக அல்லது திருமண வயதுக்குக் குறைந்த வயதில் அழுத்தம் தந்தோ, வற்புறுத்தியோ அல்லது ஏமாற்றியோ திருமணம் செய்து வைத்தல்

பாதுகாப்பான பாதுகாவலர் இல்லாத 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ARP மூலம் உதவ முடியாது, மேலும் அவர்கள் ஆதரவிற்காகக் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் ஆஸ்திரேலிய மத்தியக் காவல்துறைக்குப் பரிந்துரைக்கப்படுவார்கள்.

**www.salvationarmy.org.au/additional-referral-pathway**

ANTI-SLAVERY AUSTRALIA · Australian Muslim Women's Centre for Human Rights · project respect · Scarlet Alliance Australian Sex Workers Association · THE SALVATION ARMY